
# போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...


வாள் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 சித்திரை 12 1-5-48 சனிக்கிழமை | வீச்சு 37


ஆசிரியர்கள்:



# ஒரு சிறு பழமொழி

[பெரியார் ஈ. வெ. ரா.]

[ஐந்துக்கு இரண்டு பழுதில்லை என்பது ஒரு சிறு பழமொழி. பழமொழி சிறிதே தவிர அது கற்பிக்கும் பாடங்கள் பல. அதன் உள்ளுறை பொருளும் ஆழ்ந்த கருத்துடையது. ஆரியர்—திராவிடர் வேறுபாட்டையும், முறை முறையே அவர்கள் தன்மைகளையும் தெளிவாக விளக்கும் சிறந்ததோர் சுவடி என்று கூடச் சொல்லி விடலாம் அந்தச் சிறு பழமொழியை. அதன் பொருட் சிறப்பை இங்கு விளக்குகிறார் பெரியார், அருமையான முறையில்! எவரும் ஒப்பத்தக்க நிலையில்]

ஏதாவது விஷயத்தைப்பற்றிப் பேசுகிறபோது முழுதும் உண்மையாயிருக்காது' என்று சந்தேகப்படுகிற காலத்தில் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை' என்கிற பழமொழி சொல்வதுண்டு. அது எப்பொழுது ஏற்பட்டது, எதற்காக ஏற்பட்டது என்கிற விபரம் அநேகமாய் நமது தமிழ் மக்களுக்குத் தெரியாதென்றே நினைக்கிறேன். தெரியாதென்று நினைப்பதால் அதைப்பற்றி நான் கண்டு பிடித்த முடிவைச் சொல்லுகிறேன்.

'ஐந்துக்கிரண்டு பழுதில்லை' யென்பதானது ஐந்து விஷயம் சொன்னால் அதில் இரண்டாவது பொருத்தமாயிருக்கும், அப்படியிருந்தாலே போதும் என்கிற கருத்துக்கொண்டே இப்பழமொழி வழங்கப்பட்டிருக்கிறது. அது எப்பொழுது என்று பார்ப்போமானால் ஆரியர்கள் நமது நாட்டில் வந்து பொய்யும் புரட்டும் புளுக ஆரம்பித்த காலத்தில் அப்புரட்டுகளை யாராவது கண்டுபிடித்து கேட்க ஆரம்பித்தால் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லாமல்' அதாவது முன் சொன்னதுபோல் ஐந்தில் இரண்டு விஷயங்கள் நிஜமாயிருந்தாலேபோதுமென்றும் அதை நம்ப வேண்டியதுதான் என்றும் சொல்லி ஏமாற்றுவதற்கு உபயோகப்படுத்தினார்கள். அந்தப் பழமொழியின் ஆதாரத்தைக் கொண்டுதான் ஜனங்களிடம் இப்பொழுதும் சாஸ்திரம், புராணம், ஜாதகம், ஆரூடம், சகுனம் சாந்தி, ஓமம், யாகம், சாமியாடி வேண்டுதலை அல்லது பிரார்த்தனை, அருள் வாக்கு என்பன போன்ற மூடக்கொள்கைகளெல்லாம் நாட்டில் பரவலாயின. ஏனெனில் இவைகளில் எவ்வளவு பொய்யாய்ப் போய்விட்டாலும் அதை நம்பிக்கெட்ட மூடர்கள் பார்ப்பனர்களை சமாதானம் கேட்க ஆரம்பித்தால், அதனால் பிழைக்கும் அயோக்கியக் கூட்டத்தார் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லாமல் இருக்கிறதா இல்லையா என்று பார்க்க வேண்டுமே யொழிய ஒவ்வொன்றையும் பரிசோதிப்பது நாஸ்திகத் தன்மையாகிவிடும், கடவுளிடத்தில் நம்பிக்கையற்ற தன்மையாகிவிடும்' என்று சொல்லி ஏமாற்றி விடுவார்கள்.

ஆனால் அவற்றுள் ஐந்து என்ற எண்ணிக்கையும் இரண்டு என்கிற எண்ணிக்கையும் எப்படி குறிப்பாய் வந்தது, வேறு எண்களைச் சொல்லக்கூடாதா என்று சிலர் கேட்கக்கூடும். இம்மாதிரி கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்வது அனாவசியமாகும். ஏனெனில் ஏதாவது இரண்டு எண்களைச் சொல்லித்தானாகவேண்டும். அப்படிச் சொல்லும்போது இந்த இரண்டு எண்களை மட்டும் சொல்லக்கூடாது என்பதற்கு யாதொரு நிபந்தனையும் இல்லை. ஆனாலும் இந்த இரண்டு எண்களுக்கு குறிப்பான சமாதானம் இல்லாமல் போகவுமில்லை. அதைச் சொல்லுகிறேன் கவனமாய்க் கேளுங்கள். ஆனால் அதை நம்பியே தீரவேண்டுமென்று நான் உங்களைக் கட்டாயப் படுத்தவில்லை. உங்களுக்குச் சரியென்று தோன்றினால் ஒப்புக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் வேறு சமாதானம் கிடைக்கும் வரை இதை அனாமத்தில் வைத்திருங்கள்.

அதாவது, பார்ப்பன பா
யில் ஒரு ஸ்தோத்திர ஸ்
முண்டு. என்னவென்
"அகல்யா, துரோபதி, சீதா, த
மண்டோதரி, ஸமிருதா, பஞ்
யாஸ்மரே நித்யம் மஹா ப
நாசனம்." இதன் கரு
அகல்யை, துரோபதை, சீ
தாரை, மண்டோதரி ஆகிய ஐ
கன்னிகைகளை தினம் நினைத்
மஹா பாதகமெல்லாம் நாசம
விடும் என்பதே. இதில் ஏற்ப
விவகாரத்திற் காகத்தான் 'ஐ
க்கு இரண்டு பழுதில்லை' என்
பழமொழி உண்டாக்கப்பட்
விவகாரத்தின் தன்மையாவது:

இதை கோபமில்லாமல் ப
தறிவோடு கேட்கவேண்டு
ஏனென்றால், கோபம் வந்
பார்ப்பான் ஏமாற்றிவிடுவா
கோபமில்லாவிட்டால்தான்
விருக்கும் ரகசியம் விளங்கு
நான் கிளப்பப்போகும் விவா
இந்த ஸ்லோகத்தை எந்தப் பா
பான் எழுதினானோ அந்தப் பா
பான் எழுதி வைத்த சங்கதியை
தான் சொல்லப்போகிறேன்.
லால் நான் என் உத்தேசப்
சொல்லப்போவதாக நினைத்
ஏமாந்து போகாதீர்கள். இ
கண்டிருப்பது வாஸ்தவமா இ
லையா என்று ஒவ்வொரு பார்ப்
னையும் கேளுங்கள். வாஸ்
மல்லவென்று சொன்னால் எ
னைக் கேளுங்கள். முதலாவ
அந்த ஸ்லோகத்தில் மேல்கண்
ஐந்து பெண்களையும் கன்னி
கள் என்று குறிப்பிட்டிருக்கிற
கன்னிகை என்றால் கலவி அறி
தவள். அதாவது புருஷர்க
சாவகாசம் தொடங்காதவள், க
யாணமில்லாதவள் என்ப
பொருள். ஆகையால் அ
ஸ்லோகம் முன்னுக்குப்பின் மு
ரணானது என்று சொல்லுவேன்.

ஒரு சமயம் பார்ப்பனர்க
இதற்கு இந்த ஸ்லோகத்தில்
பெண்களைக் குறிப்பிட்டு நினை
கும்படி சொன்னதின் கருத்
கன்னித் தன்மையை உத்தேசித்
தல்ல அவர்களுடைய கற்புத் த
மையைப்பற்றி என்று சமாதா
மாகச் சொல்ல வருவார்களானா
அதைப்பற்றி சற்று யோசி
போம்.

(10-ம் பக்கம் பார்க்க)



# கடிதம்

**கனம். டி. எஸ். அவனுசிலிங்கம் அவர்கள்,**
**கல்வி அமைச்சர், சென்னை.**

ம்பன் காதையிலும், காமத்
ப்பால் நீங்கிய(!) வள்ளுவர்
ளிலும், இவ்விரண்டு இலக்
ங்களையும் நமக்களித்த இன்
தமிழிலும் இணையற்ற பற்
டையீர்,

வணக்கம். வாழ்த்து. தாங்
, மதிப்பிற்குரிய அமைச்சர்
ல்லவா, திராவிடப் பெருங்
மக்கள் ஐந்து கோடிப் பேரு
ய மாகாண சர்க்காரை நடத்
செல்லும் பொறுப்பும் திற
ம் வாய்ப்பும் பெற்ற பன்னிரு
ல் ஒருவர் அல்லவா, கண்
னத் தகும் எண்ணையும்
ழுத்தையும் நாட்டிலே பரப்
ம் கல்வித் துறைத் தலைவர்
ல்லவா, இராமகிருஷ்ண
டாலயத்து 'மாமுனிவர்'
ளத் தகும் பெற்றி வாய்ந்தவர்
ல்லவா, அதற்காக என் வணக்
மும், வைத்தியநாதர்களும்
நாச்சாரிகளும் பாஷ்யம் அய்
ங்கார்களும் அவர் அடி தொழு
ர்களும் சட்டசபை காங்கிர
லே மூட்டிவிட்ட வகுப்பு
த் தீயிலே வெந்து கருகா
ல் அந்தத் தணலிலே வெந்த
மெனத் தப்பி நின்ற ஓமாந்
ர் மந்திரி சபையைச் சேர்ந்தவ
ரிற்றே நீர் என்பதற்காக—
ந்த வெற்றிக்காக என் வாழ்த்
ம் தங்கட்கு உரியவாக; உரிய
க.

ப்ரல் 22ம் நாள் காலை
பாரத தேவி''யைப் பிரித்தேன்; படித்துக்கொண்டே வந்தேன்; சட்டசபை நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் பகுதி வந்தது; பார்த்தேன்; ஆவலோடு படிக்கத் தொடங்கினேன்; சில வரிகள் கூடப் படிக்கவில்லை; மூர்ச்சித்து வீழ்ந்துவிட்டேன்.

மூர்ச்சை தெளிந்து எழுந்த போது அந்த "பாரத தேவி"யை மீண்டும் பார்த்தேன்; கண்களை அகலத் திறந்து பார்த்தேன்; அங்கு பொறிக்கப் பட்டிருந்த வாசகங்களை என்றால் நம்ப முடியவில்லை. எனவே கண்களை நன்றாகக் கசக்கிக்கொண்டு முகத்தைத் துடைத்துக் கொண்டு நேராக நிமிர்ந்து உட்கார்ந்து படித்துப் பார்த்தேன்; நான் காண்பது கனவோ என்ற ஐயம் பிறந்தது. எனவே என் கன்னத்தை நான் கிள்ளிக் கொண்டு பிறகு, கன்னத்தைக் கையால் தடவிப் பார்த்தேன். கன்னம் சிவந்திருந்தது. பிறகு தான் காண்பது கனவல்ல உண்மை என்பது தெளிந்தேன். தெளிந்ததும் வியர்த்தேன். திடுக்கிட்டுப்போனேன். திகைப்பும் திக்பிரமையும் அடைந்தேன்.

கடலிலே, ஒரு கணமும் ஓய்வின்றி, சுருண்டு சுருண்டு எழுந்து, மடங்கி மடங்கி விளையாடி, ஓசை எழுப்பிக் கொண்டே இருக்கும் அலைகள் திடீரென்று தம் விளையாட்டை நிறுத்தி, ஓசையையும் நிறுத்தி, நிசப்தமாக இருக்கத் தொடங்கி விட்டால், எதிரே, நீலத்திரைக் கடல் ஓரத்திலே நின்று, அந்த அலைகளின் விளையாட்டைக் கண்டு வந்தவன் திகைப்படையத் தானே செய்வான்! அது போலத்தான், அமைச்சர் அவர்களே, பாரததேவியில் அந்தச் சேதியைக் கண்டதும் திகைத்துப் போனேன் நான்.

ஜகத்குரு சங்கராச்சாரியார், ஒரு நாளைக்கு, திடீரென்று, சாஸ்திரங்களும் சடங்கு சம்பிரதாயங்களும் ஒழிந்தாலொழிய நாட்டிற்கு விமோசனமில்லை என்று பிரசாரம்புரியத் தொடங்கினால் எப்படி இருக்கும்?

கம்யூனிஸ்டு 'ஜீவா,' இருந்தாற்போலிருந்து, டாடாக்களும் பிர்லாக்களும் டால்மியா கோயங்காக்களும்தான் பாட்டாளிகளின் உண்மையான கூட்டாளிகள்; அவர்களால்தான் ஏழைத் தொழிலாளர்கட்கு நன்மை பிறக்க முடியும் என்று சென்னைக் கடற்கரையில் சொற்பொழிவு ஆற்றினால் எப்படி இருக்கும்?

எது தவறினாலும் நிருத்திகை விரதம் இருக்கத் தவறாத முதலவர் ஓமந்தூரார் என்றேனும் ஓர் நாள் நாஸ்திகம் ஒன்றுதான் நம் மக்கள் முன்னேற்றத்திற்குரிய மார்க்கம் என்று "திடீர் வேட்டு" போட்டால் எப்படி இருக்கும்?

ஆரியர் வேதம் எனத்தகும் ஆனந்த விகடன் திராவிடர் கழகமே நம்மை நம் இலட்சிய பூமிக்கு அழைத்துச் செல்லும் புது உலகத் தூதன் என்று தலையங்கம் தீட்டி, அந்தத் தலையங்கத்திற்குப் பக்கத்தில், ஆரிய வேதங்களையும் புராண இதிகாசங்களையும் கிண்டல் செய்து "கார்ட்டூ"னும் வெளியிட்டால் எப்படி இருக்கும்?

தேசீய திலகம் பண்டித நேரு காங்கிரசை ஒழிப்பதே நம் முதல் வேலை என்று முழக்கமிடுகிறார் என்பதாக தேசீயப் பத்திரிகைகள் நாலு கலம் தலைப்பிட்டு முந்திரிக்கொட்டை எழுத்துகளில் அந்த முத்தான சேதியை சமக்களிததால் எப்படி இருக்கும்?

மவுண்ட்ரோட் மகாவிஷ்ணு என்ற பட்டப்பெயர் படைத்த 'ஹிந்து', சத்கதா காலட்சேபச் சேதிகளை இனி வெளியிடுவதில்லை என்று முடிவுகட்டிக் கொண்டு அந்த முடிவுப்படியே நடப்பது என்றுந்தொடங்கிவிட்டால் நாடு என்ன நினைக்கும்?

நடக்க முடியாத இந் நிகழ்ச்சிகள் எல்லாம் ஒரே காலத்தில் நடந்துவிட்டால் நாட்டிலே திகைப்பு எவ்வளவிருக்கும்?

அவ்வளவு திகைப்பும் அதைவிட அதிகமான மயக்கமும் எனக்கு ஏற்பட்டது, பாரததேவியில் — பார்ப்பனீய ஏட்டில், தாங்கள், சட்டசபையிலே, ஆரிய ஆணவத்திற்குக் கசையடி கொடுத்தீர்கள் என்ற சேதியைக் கண்டபோது!

'சூனமானு' என்ற இரண்டு எழுத்துக்களையும் கண்டால் தங்கட்கு ஏற்படும் கொந்தளிப்பு எவ்வளவு! தங்கள் முகத்தில் தோன்றும் சுருக்கங்கள் எத்தனை! தங்கள் கண்களில் பறக்கும் தீப்பொறிதான் கொஞ்சமா! சுயமரியாதை இயக்கம் என்று சொன்னாலே தங்கள் நெஞ்சு துடிப்பதும் குருதி கொதிப்பதும் நரம்புகள் புடைப்பதும் கைகள் தினவெடுப்பதும் தோள்கள் துவள்வதும் நித்திய நிகழ்ச்சிகளாக அல்லவோ இருந்தன இந்நாட்டில்! இப்படிப்பட்ட நீங்கள் இவ்வளவு துணிச்சலாக பார்ப்பனீயக் கோட்டைமீது வெடிகுண்டு வீசியிருக்கிறீர்கள் என்று கண்டபோது நான் திகைப்பும் திக்பிரமையும் அடைந்ததிலே வியப்பென்ன இருக்கிறது?

பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் வேற்றுமையை சர்க்கார் உத்தியோக பூர்வமாக அங்கீகரித்திருக்கிறதா என்று சட்டசபை உறுப்பினர் ஒருவர்— அவர் ஆரிய உறுப்பினர் என்றெண்ணுகிறேன் — கேட்டபோது நீங்கள் தந்த பதில் உண்மையிலேயே பார்ப்பனீயக் கரையான்களுக்குச் சரியானதோர் கசையடி என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பார்ப்பனர் — அல்லாதார் என்று எழுதுகிறபோது, இடையே உள்ளதே ஒரு சிறு கோடு அது பெரியார் இராமசாமி கிழித்த கோடு அல்ல, ஓமந்தூர் ரெட்டியாருடைய சிறு பேனா கிழித்த கோடும் அல்ல, பார்ப்பனத் துவேஷிகள் சிலருடைய வகுப்புவாதப் பிரசாரத்தினால் உண்டான கோடும் அல்ல. அது பலப்பல நூற்றாண்டுகளாக உள்ள கோடு; மாவீரர் புத்தராலும் அழிக்கப்பட முடியாமற்போன கோடு; இராமாநுஜரின் சீர்திருத்தப் பணியை அணைத்து அழித்த கோடு; திருவள்ளுவரின் போர்வாளுக்குத் தப்பி நின்ற கோடு; சித்தர்களின் பரம்பரையாலும் சாய்க்க முடியாமற்போன கோடு. வர்ணாஸ்ரம தர்மம் என்ற விஷத்தையே மையாகக் கொண்டு, வேத புராண இதிகாசம் எனும் இறகு பேனாவையே எழுதுகோலாகக் கொண்டு, பார்ப்பனீயம் எனும் கொடியோன் தீட்டிய கோடு அந்தச் சிறு கோடு. சிறு கோடுதான் ஆனால் பலப்பல புரட்சி வீரர்களின் சண்டமாருதப் பிரசார வேகத்தாலும் அழியாத கோடு.

பார்ப்பனர்—அல்லாதார் என்ற வேற்றுமை எங்கே இல்லை? கோயிலிலே இருக்கிறது, குடி தண்ணீர்ப் பானையிலே இருக்கிறது, குளங்களுக்கு அமைந்துள்ள படித்துறையிலே இருக்கிறது, சிற்றுண்டிச் சாலையிலே இருக்கிறது, வேதங்களில் புராணங்களில் இதிகாசங்களில் கதைப் புத்தகங்களில் கவிதைச் சுவடிகளில் இலக்கியங்களில் இருக்கிறது. இசை அரங்கில் நாடகத்தில் சினிமாவில் பத்திரிகை உலகில் எங்கே இல்லை அந்த வேற்றுமை? சட்டசபையிலே இல்லையா, கல்லூரி மண்டபங்களில் இல்லையா, உத்தியோக பீடங்களில் இல்லையா, வழக்கு மன்றத்தில் இல்லையா, எங்கே இல்லை? பார்ப்பனீயம் தூவிய நச்சு விதைகள் நாடெங்கும்— வாழ்க்கைத் துறையெங்கும்— மக்கள் அலுவல் இடமெங்கும் காணப்படுவதை யார் மறுக்க முடியும்?

பார்ப்பனர், அல்லாதார் என்ற வேற்றுமையே நாட்டில் இல்லாதது போலவும், எப்போதும் இருந்திராதது போலவும் சர்க்கார், புதிதாக ஏதோ அப்படி ஒரு வேற்றுமையை உண்டு பண்ணுவது போலவும், அப்படி உண்டு பண்ணிக் கொண்டதால் தான் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் அந்த வேற்றுமை காட்டப் படுகிறதென்றும் பாவனை செய்து கொண்டு, சர்க்கார், உத்தியோக பூர்வமாக இதை அங்கீகரி


## மதுரை தோழர்கட்கு!

போர்வாள் கிடைக்கவில்லை என்ற நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க அடுத்தவாரம் முதல் அதிகமான காப்பிகள் வரவழைக்கப்படுகின்றன.

கா. ஆ. சங்கையா,
விற்பனையாளன், மதுரை.

...றதா-அங்கீகரிக்கலாமா என்று கேட்ட தோழர் ராகவய்யா என்பவருக்கு "**பிறப்பு முதல் இறப்பு வரை இவ் வேற்றுமை இருக்கும் போது அவற்றை சர்க்கார் மட்டும் எப்படி அங்கீகரிக்காமல் இருக்க முடியும்**" என்று நீங்கள் விடை கொடுத்தீர்களே கன்னத்தில் அறைந்தது போல, அந்த விடையை, சட்டசபையில், நாங்கள் இருந்தால்கூட அவ்வளவு திட்டவட்டமாகக் கூறி இருக்க மாட்டோம். ஆனால் நீங்கள்—இரவும் பகலும் எங்களைத் தூற்றுவதையே வாழ்க்கைத் தொண்டாகக் கருதி இருந்த [இருந்த என்பதென்ன, இருக்கும்] நீங்கள்—வகுப்பு வாதிகள் என்ற பட்டத்தை எங்கள் மீது வீசத் தவறியும் தயங்காத நீங்கள், ஏப்ரல் 22-ல் சட்டசபையில் இவ்வளவு தெளிவாகக் கூறி இருக்கிறீர்கள் சர்க்கார் எப்படி அந்த வேற்றுமையை அங்கீகரிக்காமல் இருக்க முடியும் என்று.

சென்ற 25 ஆண்டுகளாக நாங்கள் கூறிவந்தது இதைத்தான். இன்றும் கூறிவருவது இதையே தான். இந்த உண்மையை உரைத்ததற்காக எங்கள் வட்டாரத்திற்கு, தங்கள் வட்டாரம் தந்த பட்டம்தான்—கொடுத்த பரிசுதான்—அளித்த "இனாம்" தான் வகுப்புத் துவேஷம் என்பது!

நீங்கள், இன்று, சட்டமன்றத்தில், மந்திரி பீடத்தில் இருந்து கொண்டு கூறும் இதே உண்மையைத்தான் நாங்கள் வெளியே, மரத்தடியில், கடற்கரையில், ஆற்றோரத்தில், நாற்சந்தியில், மக்கள் மன்றத்தில் கூறிவந்தோம். நாங்கள் பெற்றது வெறுப்பு! துவேஷம்! பகைமை பொச்சரிப்பு! தூற்றல்! பார்ப்பனர் மட்டுமல்ல—அவர்கள் தூற்றுவது இயற்கை—தாங்களும் தங்களைப்போன்ற தமிழரும்கூட தேசீய முகாமில் இருந்து கொண்டு எங்கள்மீது தூற்றல் பாணம் தொடுத்தீர்கள். அவர்களிலே பலருக்கு "திருப்பரங்குன்றம்" கண்திறந்தது. ஆனால் தாங்களோ அப்போதுங்கூட கண்திறந்து பார்க்க மறந்தீர்கள், எங்களைத் தூற்றியே வந்தீர்கள். தங்கள் மந்திரி சபையை வீழ்த்திட வைத்தியநாத வேதியர்கள் சென்ற திங்கள் திட்டமிட்ட நேரத்தில்தான் தாங்கள் கண்விழித்திருக்கிறீர்கள். ஆரிய ஆணவத்தை அளந்து பார்த்திருக்கிறீர்கள். சென்ற கிழமை சட்ட மன்றத்தில் அதை உடைத்தும் இருக்கிறீர்கள்.

ஆரிய நச்சரவம் கொடு விஷம் நிறைந்தது என்று நாங்கள் கூறிய போது நீங்கள் நம்பவில்லை; பித்தர் பிதற்றல் என்று எங்கள் உரையை எள்ளி நகையாடினீர்கள்; நாயக்கர் கூட்டம் குதர்க்கம் பேசுதல் இயற்கை என்று கையாண்டி செய்தீர்கள்; துவேஷப் பிரசாரம் தானே இவர்களுக்குத் தெரியும்—வேறென்ன தெரியும் என்று இலட்சியவாதம் பேசினீர்கள். ஆனால் இன்றோ அந்த நச்சரவம் உங்களையே தீண்டிவிட்டது. தீண்டவே உங்களுக்கு உண்மை தெரிந்து விட்டது; ஊருக்கும் உரைக்கத் தொடங்கி விட்டீர்கள். எங்கள் பாராட்டுதல் தங்கட்கு!

"**பிறப்பு முதல் இறப்பு வரை உள்ளது பார்ப்பனர்—அல்லாதார் வேற்றுமை!**" என்ன அருமையான வாசகம்! எவ்வளவு ஆழ்ந்த பொருள்!

"பிறவியிலேயே வேற்றுமை இருக்கிறதப்பா—சாதி அமைப்பிலேயே மாறுபாடு உள்ளதப்பா—வர்ணாஸ்ரமக் கொடுமையிலேயே இந்தக் கேடு புதைந்து கிடக்கின்றதப்பா —எறிப்பப்பா முதலில் அதை! பிறகு வா தம்பி வா இந்த சர்க்காரிடம்!" என்று பொருள் தரும் இந்த வாசகத்தை எவ்வளவு லாகவமாக எளிதாக தைரியமாக எடுத்து வீசினீர்கள் சட்ட சபையில்! வாழ்க அந்தத் தைரியம்!

சென்னை மாகாணக் கல்லூரிகளில் வாசிக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 16,300. இதில் ஆரிய மாணவர்களின் தொகை 8,690 திராவிட மாணவர்கள் 7148. ஆரிய மாணவர்கள் 5690! 100க்கு 3 பேர் ஜனத்தொகை உள்ள பார்ப்பனர்கட்கு 100க்கு 56 விகிதத்தில் ஸ்தானம். 100க்கு 90 பேர் உள்ள நமக்கு 100க்கு 44 ஸ்தானம்! அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய இடங்கள் 3. கிடைத்துள்ளதோ 56! நமக்குக் கிடைக்கவேண்டியது 90 கிடைத்திருப்பதோ 44! நியாயமானதை விட 18 மடங்கு அதிகப்படியான இடங்கள் அவர்களுக்கு! உரிய பங்கிலேயே பாதி கிடையாது நமக்கு. இந்த நிலையில் நேர்மையில் நாட்டமுடைய எந்த சர்க்காரும் பார்ப்பனரல்லாத மாணவர்க்கே முதலில் இடம் தர வேண்டும். பிறகே, மிச்சம் இடம்

(9-ம் பக்கம் பார்க்க)

---

## ஏஜண்டுகளுக்கு அறிவிப்பு!

தூத்துக்குடி மாநாட்டை முன்னிட்டு அடுத்த வாரம் போர்வாள் ஒரு நாள் முன்னதாக அதாவது வெள்ளிக் கிழமையன்றே வெளி வரும். ரயில் பார்சல் மூலம் போர்வாள் பெறும் விற்பனையாளர்கள் வெள்ளிக்கிழமை காலையே ரயில் நிலையம் சென்று பார்சலைப் பெற்றுக்கொள்ளவும்.

போர்வாள்

1—5—48 சனிக்கிழமை

# அந்த ஒரு சொல்!

"என்னப்பா நீ தயார்தானு? நான் தயார். ஆபீசில் ஐந்து நாள் 'லீவ் கூட வாங்கி விட்டேன் !"

"என்றைக்குப் புறப்படலாம்? வெள்ளிக்கிழமையா? செச்சே! அன்று புறப்பட்டால் போய்ச் சேரவே முடியாதப்பா! வியாழக் கிழமை புறப்பட்டுவிட வேண்டும். ஏன்? புதன் கிழமையேகூட புறப் பட்டுவிடலாம்!"

"புறப்படுவது இருக்கட்டும் தம்பி ஒரு புறம். மாநாட்டு ஏற்பாடு களைப் பார்த்தாயா? சேலத்தையும் திருச்சியையும் கூட தோற்கடித்து விடும்போல் இருக்கிறதே! அருமை யான ஏற்பாடுகள்! அற்புதமான அமைப்பு வேலைகள்!',

"ஆமாம் ஆமாம் நான் கூட பார்த்தேன் விடுதலையில். லட்சக் கணக்கில் தங்கும் தகுதி வாய்ந்த பிரம்மாண்டமான பந்தலாம்! கண் ணையும் கருத்தையும் கவரும் அழ கியமுறையில் மேடை அமைப் பாம்! உட்கார்ந்த இடத்திலிருந்தே தோழர் நீலமேகம் 'ஸ்விட்ச்' சைத் தட்டினல், கொடி மின்சார விசையினல் உயருமாம். குழந்தைகளுக்குப் படுக்கத் தொட் டில்! குடிக் கப்பால்! கூப்பிட்ட வுடன் ஓடோடிவரும் தொண்டர் கள். வெளியூர் தோழர்கட்கு உட னுக்குடன் உதவி செய்ய உழைப் பாளர்கள். குடும்பம் குடும்ப மாகத்திராவிடர்கள் தங்க இடவசதி எல்லாம் உண்டாம்! எல்லாம் உண்டாம்!"

"மேடை நடுவில் திராவிட நாடாமே! அதைச்சுற்றி தலைவர்கள் பிரமுகர்கள் வளையமாமே! அருகே கிளிக்கூண்டாமே, பேச்சாளர்கள் நின்று பேச! அடே அப்பா! என் னென்ன ஏற்பாடுகள்!"

"மாநாட்டு ஊர்வலம் ஒன்றைப் பார்க்கவே நாம் போய்த் தீரவேண் டுமே! ராதா நாடகம் வேறு! சிறந்த சொற்பொழிவுகள், படத்திறப்பு கள், மக்கள் காட்டும் உற்சாகம், அவர்கள் உள்ளக் கொந்தளிப்பு ஒவ்வொன்றும் நம்மைத் தூண்டில போட்டு இழுக்கிறதப்பா தூத்துக் குடிக்கு!"

"நான் கூட போகாமல் இருந்து விடலாம் என்றுதான் இருந்தேன். அப்புறம் பார்த்தால் மாநாடு கூடும் நெருக்கடியான நேரமும், பிரம் மாண்டமான ஏற்பாடுகளும், அங்கு வர இருக்கும் திட்டங்க ளும், தினம் தினம். "விடுதலை" யில் வரும் மாநாட்டுச் சேதிகளும் நம்மைச் சும்மா விடவில்லையப்பா சும்மா விடவில்லை."

"விடுதலைச் சேதிகள் இருக்கட் டும்! நம்ம மனசுகேட்குதா முதல் லே!புறப்படு தம்பி புறப்படு-அங்கே மாநாடுன்னு இங்கென்னு வேலை உனக்கு இங்கென்னு வேலைன்னு இல்லா கேக்குது?"

"அது கூட அல்லவே தொல்லை. எப்படா அந்த மே மாதம் பிறக் கும், எப்படா அந்த 8, 9 வரும், எப்படா தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ஏறுவோம் என்று இதே சிந்தனை யால்ல போச்சி! தூத்துக்குடி! தூத்துக்குடி! தூத்துக்குடி! இதேதானப்பா என் மானசபூசை இந்த இரண்டு வாரமா?"

"உன் மானசபூசை என்
தமிழர் அனைவருடைய உள்ள
திலும் இந்த இரு வார காலமா
நடமாடும் ஒரே ஒரு சொல் தூத்து
குடி என்பதுதான்."

இது, உரையாடல்! திருவா
ரிலும் திருநெல்வேலியும், சென்னை
யிலும் செங்கற்பட்டிலும், கோவை
யிலும் சேலத்திலும், கும்பகோ
ணத்திலும் திருச்சிறைப்பள்ளி
லும, காஞ்சியிலும் மதுரையிலு
தமிழகம் முழுவதும் தவழ்ந்
தவழ்ந்து விளையாடும் உரைய
டல்! திராவிடர் இயக்கத் தோழ
கள் இருவர் சேர்கிறபோது, நண்
பர்கள் சிலர் கூடும்போது, திரா
விடர் கழகக் கூட்டங்கள் நடக்கு
போது, கடற்கரையில் தமிழர்க
உலாத்தும்போது, பூங்காவி
இயற்கை இன்பம் நுகரும்போ
எங்கும், எங்கெங்கும், இதே
பேச்சு!

தூத்துக்குடி என்ற சொல் நட
மாடாத ஊரில்லை. அதைப்பற்றி
பேசாத திராவிடரில்லை. மாநா
டுச் சேதி இல்லாத திராவிடப் ப
திரிகை இல்லை. தமிழகத்தின்
மூலை முடுக்குகளிலும் பட்
தொட்டிகளிலும் சின்னஞ்சிறு
கிராமங்கள் உட்பட எவ்விடத்து
எப் பகுதியிலும் எந்த மாவட்டத்தி
லும் தூத்துக்குடி எனும் துந்து
முழக்கந்தான். மே 8, 9 சன
ஞாயிறுகளில் மாநாடாமே என்
இன்பக் கீதம்தான்! தூத்துக்கு
போவோம் தூத்துக்கு
போவோம் என்ற பரணிப் பா
டுத்தான். ஆம்! எங்கும் தூத்து
குடி என்பதே பேச்சு! அனைவ
நெஞ்சிலும் அந்தச் சொல்லே வ
லாச்சு!

தூத்துக்குடி மாநாடு இதுவ
நடைபெற்ற வேறு எந்த மாநா
டையும் விட மிகுந்த ஆவ
லோடும் உற்சாகத்தோடும் திரா
விட மக்களால் எதிர்பார்க்கப்படு
றது. மாநாடு எப்போது கூடு
கூடும் என்று மக்கள், துடிதுடி
போடும், கொந்தளிக்கு
உள்ளத்தோடும், நெஞ்சத்தி
குமுறி எழுகின்ற ஆத்திர அ
களை அடக்கிக்கொண்டும் மே 8, 9
தேதிகளை எண்ணி எண்ணி நா
களை எண்ணிக்கொண்டிருக்கி
றனர். எப்பொழுது வியாழ
கிழமை வரும், எப்போது வண்
ஏறலாம், எப்போது தூத்துக்கு

அடையலாம், எப்போது ஊர்வலத்தில் கலந்துகொள்ளலாம் என்ற சிந்தனையே ஒவ்வொரு திராவிட இளைஞன் உள்ளத்தையும் ஒவ்வொரு நாடியும் நீராட்டிக் கொண்டிருக்கிறது. இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் பம்பாயிலிருந்தும் தூர கிழக்கிலே உள்ள சிங்கப்பூர் பகுதிகளில் இருந்துகூட திராவிடர்கள் தூத்துக்குடி பாசறை நோக்கி வரத் தொடங்கி இருக்கின்றனர். குடும்பம் குடும்பமாக, கும்பல் கும்பலாக, கூட்டம் கூட்டமாக, திரள் திரளாக, திராவிடத் திருநாட்டு மக்கள் நெல்வேலிக்குள்ளிருக்கும் தூத்துக்குடிக் கழனி நோக்கி, தங்கள் பயணம் தொடங்கிக் கொண்டிருக்கின்றனர்.

திராவிடம், தூத்துக்குடி மாநாடு என்ற சேதி கேட்டதும் இங்ஙனம் துள்ளிக் குதித்து ஆநந்தத் தாண்டவம் ஆடுவதற்குக் காரணம் மாநாடு கூடுகிற நேரத்தின் முக்யத்வம்தான்.

மாநாடு கூடுகிற நேரம், இல்லாத கருஞ் சட்டைப் படையை இருப்பதாக எண்ணிக்கொண்டு சர்க்கார் அதனைத் தடை செய்துள்ள நேரம்; ஊரெங்கும் நாடெங்கும் உள்ள திராவிடர் கழகங்களைப் போலீசார் சோதனையிட்டு, கருப்புக் சட்டை கிடைத்தால் கருப்புச் சட்டை, கோட் கிடைத்தால் கோட், வேட்டி கிடைத்தால் வேட்டி, கருப்புச் சேலை கிடைத்தால் சேலை, கருப்புக் கைக் குட்டை கிடைத்தால் அது ஒன்று கிடைத்ததை எடுத்துச் சென்றுள்ள நேரம்; இவை ஒன்றுமே இல்லையென்றால் திராவிடக் கழகக் கூட்டக்குறிப்புச் சுவடிகளையோ உறுப்பினர் பட்டியலையோ குடி அரசு வால்யூம்களையோ கட்டண ரசீதுப் புத்தகங்களையோ ட்டிச் சென்றுள்ள நேரம்; விடுதலையையும் குடி அரசையும் திராவிட நாட்டையும் திராவிடனையும் போர்வாளையும் முரசொலியையும் புரட்டிப் புரட்டிப் பார்த்து எந்த இடத்திலே எந்தத் துவேஷம் ஒளிந்து கிடக்கிறது என்று அறிய ஆராய்ச்சி சர்க்கார் மாளிகையிலே ஜரூராக நடக்கிற நேரம்; எந்தெந்த ஊர்கள் மீது 144 வீசலாம், யார் யாருக்குத் தடை உத்தரவு விதிக்கலாம், எங்கெந்த ஏடுகளுக்கு ஜாமீன் கேட்கலாம் என்று ஆளவந்தார்கள் தங்கள் அடக்குமுறை வாளினைக் கூர்தீட்டுகிற நேரம்; ஆரியர் நெஞ்சிலே களிப்பு கூத்தாடும் வேளை; ஆயிரக் கணக்கில் தமிழர்கள் ஆங்காங்கு கூடி நின்று தலைவர் பெரியாரிடமிருந்து என்ன கட்டளை பிறக்குமோ, எத்தகைய தாக்கீது தோன்றுமோ என்று ஆவலோடு எதிர்பார்க்கிற வேளை; திராவிட இளைஞர் ஒவ்வொருவர் உள்ளமும் ஒரு குமுறும் எரிமலையாக, ஒரு கொந்தளிக்கும் கடலாக, சுழன்று சுழன்றடிக்கும் ஒரு சண்டமாருதமாகக் காட்சி தரும் சமயம்; இன்பத் திராவிடத்துச் சேய்களெலாம் நாட்டின் எம்மருங்கும் கூடிநின்று சிறைச்சாலை என்ன செய்யும் என்ற பண் பாடி, புது வாழ்வுபெற யாங்கள் எந்த அடக்குமுறைக்கும் அஞ்சோம் அஞ்சோம் என ஆர்ப்பரிக்கும் காலம்; மருங்கூர் அபாய அறிகுறி காட்டி இருக்கிற நேரம்; திராவிடத்தில் இன எழுச்சிப் போர் முரசு கொட்டப்படுகிற வேளை.

இத்தகைய வேளையிலே மாநாடு கூடுகிறது. எனவேதான் மக்கள் உள்ளத்திலே மாநாடு பற்றிய இவ்வளவு பரபரப்பும் துடிதுடிப்பும் ஆவலுணர்ச்சியும் காணப்படுகின்றன.

தூத்துக்குடி மாநாடு, நாம் சென்ற கிழமையே குறிப்பிட்டது போல, திராவிடர்களுடைய வருங் காலத்தை உருவாக்கும் வல்லமை வாய்ந்ததாய் இருக்கும். அங்கே நிறைவேறும் தீர்மானங்கள் ஒவ்வொன்றும் உயிர்ப்பாற்றல் நிறைந்தனவாய், உணர்ச்சி வளம் கொழுமியனவாய், இனி வரும் திராவிடம் இத்தன்மையில் இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்டும் சிறப்பும் செம்மையும் செறிந்தனவாய் ஒளி வீசும். வெறும் சம்பிரதாயத்திற்காகக் கூடுகிற மாநாடாகவோ, பேச்சாளர்களின் சொல்லாற்றலை அளந்தறியக் கூடும் கூட்டமாகவோ இராமல் உணர்ச்சியும் எழுச்சியும் உற்சாகமும் நிறைந்த பாசறைக் கூட்டமாகவே இருக்கும். இயக்கத் தினசரி 'விடுதலை' குறிப்பிட்டிருப்பது போல, தூத்துக்குடி மாநாடு, வெகு நாளைக்கு இப்படிப்பட்ட மாநாடு தேவை இல்லாதபடிச் செய்யக் கூடிய அவ்வளவு எண்ணங்களை, திட்டங்களை, கடமைகளை, ஆர்வத்தை மக்களுக்கு ஊட்டும்படி அமைந்திருக்கும் என்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை.

மாநாட்டிற்குத் தலைமை வகிப்பவர் வெறும் சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கையுடையவர் அல்ல. கேவலம் அழகிலோ அலங்காரத்திலோ பற்றுடையவர் அல்ல; மந்திரி நாற்காலிகளிலோ சட்டசபை நுழைவிலோ நாட்டம் உடையவர் அல்ல; பதவிகளும் பட்டங்களும் காலில் தட்டுப் பட்டாலும் அவற்றை எடுத்துக் கொள்ளும்


## தூத்துக்குடி மாநாடு

★

மே 8, 9 சனி ஞாயிறுகளில்

★

**பெரியார் தலைமை வகிக்கிறார்.**

★

தோழர்களே, திரண்டு வாருங்கள்.

பண்பினர் அல்ல; சீமான்களின்
சீற்றத்தையோ பூமான்களின் புன்
முறுவலேயோ துளியேனும் மதிப்ப
வர் அல்ல; ஆட்சிப் பீடம் உறுமி
ஞலும் ஆளவந்தார்கள் முழங்கிஞ
லும் அவை கண்டு அணுவளவும்
அஞ்சுபவரல்ல. சிறை அவருக்
குச் சிங்காரத் தோட்டம். எளிய
வாழ்வு அவருக்கு தேன்; தென்றல்!
புரட்சி அவருக்குப் புன் முறுவல்!
புது வாழ்வு அவருடைய இலட்சி
யம். தியாகம் அவருடைய வாழ்க்
கையின் உள்ளுறை. இடுக்கண்
வருங்கால் நகுக என்பது அவரு
டைய கோட்பாடு. எவர் எதிர்த்தால்
என்ன, எவர் பகைத்தால் என்ன,
நெஞ்சில் பட்டதை நேர்மையில்
காட்டுதல் அவருடைய தொண்டு.
ஒரு முறை அறிஞர் அண்ணு அவர்
கள் அவருக் கென்றே அமைந்
துள்ள அந்த அழகிய தமிழ் நடை
யில் கூறியதுபோல, அவர், "வடு
நிரம்பிய உடலும் வைரமும்
பாய்ந்த உள்ளமும், செய்வகை
அநுபவமும் தெரிந்தவர். சிறைக்
கோட்டத்திற்கும் வீட்டிற்கும் வித்தி
யாசமிருப்பதாகவே கருதாதவர்.
ஓய்வே தெரியாதவர். களம் பல
கண்டவர். போர் பல நடத்தியவர்.
போக வாழ்வை வெறுத்து ஏழை
வாழ்வைநடாத்திவருபவர். அவருக்
குஅநேக தாளமுக்து நடராசன்கள்
கிடைப்பர். புற்றிலிருந்து ஈசல்
கிளம்புவதுபோல வாலிபர்கள்
வருகிருர்களே என்று ஆளும் கூட்
டத்தார் ஆயாசத்தோடு கூறும்
விதத்திலே வாலிபர்களை வரச்
சொல்லும் வசீகரம் அவருக்கு
உண்டு." எழுபதாண்டுக் கிழவர்
என்ருலும் முப்பதாண்டுக் காளை
போல தமிழ்நாடு முழுவதும் ஓயாது
சுழன்று சுழன்று மின்சார வேகத்
தில் பணியாற்றும் தலைவர் அவர்.
ஆம்! அவர் தலைமையில் தான்
மாநாடு நடைபெறுகிறது. ஆகவே
அது வெற்றி பெறுவது உறுதி.
அதை விட உறுதி அது நாட்டு
மக்களுக்கான நல்ல திட்டங்களைத்
தீட்டிடும் என்பது. **பெரியார்** ஒரு
மாநாட்டிற்குத் தலைமை தாங்குகி
ருர் என்ருல் அது சம்பிரதாய
மாநாடாக எப்படி இருக்க முடி
யும்? சம்பிரதாயங்களையே
வெட்டி வீழ்த்த வந்த புரட்சி வீரர்
அல்லரா அவர்?

வெள்ளை ஏகாதிபத்தியத்தை
எதிர்த்து அறப்போர் ஆற்றிய
**அண்ணல் வ. உ. சி.** பிறந்த மண்
ணிலே, தமிழகத்திலே புரட்சிப்
புயல் வீசச் செய்த **வைக்கம் வீரர்**
**பெரியார்** தலைமையில் கூடும்
**திராவிடர் கழக மாநாடு** நாட்டிற்கு
நல்வழி காட்டும என்பதை யார்
மறுக்க முடியும்?

சேலம் என்ற சொல் இன்று
செந்தமிழர் நாவில் எலாம் நட
மாடுகிறது. அதுவேபோலத்தான்
தூத்துக்குடி எதிர்காலத் தமிழ்
மக்கள் நெஞ்சில் எலாம் நடமா
டும். "சேலம்," திராவிடக் கழ
கத்தைப் பெற்றெடுத்துத் தந்தது
தமிழகத்திற்கு! தூத்துக்குடி, சுதந்
தர சோஷலிசத் திராவிடக் குடி
யரசையே தருதற்கான வழி
வகுக்க இருக்கிறது. ஆம்! சேலம்
மாநாட்டிற்குத் தலைவர் பெரியார்.
அவரேதான் தூத்துக்குடி மாநாட்
டுக்குந் தலைவர். சேலத்தை
வெறுத்தவர்கள் தூத்துக்குடியை
யும் வெறுப்பர்—அது இயற்கை.
ஆனல் சேலம் எமக்குப் புது வாழ்
வளித்தது என்று பூரிப்புடன் புகல்
பவர்கள் எவரும் தூத்துக்குடியை
வெறுக்க முடியாது. விரும்பி
விரும்பிக் கரும்பைத் தின்றவன்
பிறகு கருப்பஞ் சாறுண்ணத் தயங்
கல் எங்கேனும் உண்டோ?

இன்னும் ஏழு நாட்களே உள்
ளன. மே 8ல் மாநாடு! இன்று,
தமிழர் வாழும் ஊர்தோறும்
"தூத்துக்குடி" உலவுகிறது. மே
8க்குப் பிறகு **அந்த ஒரு சொல்**
தமிழர் உள்ளந்தோறும் பவனி
வரும், வளமார் எமது திராவிட
நாடு வாழ்க வாழ்கவே என்று
பண்பாடிய வண்ணம்! அந்தப்
பவனி இன்பத் திராவிடம் எனும்
இலட்சிய பூமியிலே சென்று
முடியும்.

வாழ்க அந்தப் பவனி! வாழ்க
தூத்துக்குடி! வாழ்க திராவிடம்!

—

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்துகள் தலை நீட்டி நிற்பது
முதலில் அவளது கண்களுக்குத்
தென்பட்டன. பழத்தூர் என்ற
பெயரைப் பார்த்ததும், அவள்
மனதில் ஒருவித பயம் தலைதூக்கி
யது. அவசர அவசரமாக அச்
செய்தியை கண்களால் விழுங்கத்
தொடங்கிஞள்.

(தொடரும்)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது விஷயம், குருப
தினியின் சங்கதியையும் சிஷ்
னின் யோக்கியதையையும் வெ
யாக்கிற்று. இரண்டாவது வி
யம் தேவர்களுக்கெல்லாம் அரச
யிருப்பவன் யோக்கியதையைய
ரிஷிபத்தினியின் யோக்கியல
யையும் வெளியாக்கிற்று. இ
இரண்டு விஷயமும் புருஷர்கள
ஒப்புக்கொள்ளப்படவில்லை எ
பதையாவது காட்டிற்று. மூன்
வது விஷயமோ புருஷனும் ஒப்
கொண்டான், மாரியும் ஒப்
கொண்டாள், உலகமும் ஒப்
கொண்டது என்பதைக் க
டிற்று. நாலாவது விஷயம், அ
தாரங்கள் என்பதின் யோ
யதையையும் வெளியாக்கிற்று.

ஐந்தாவது, இராக்ஷசர்கள் எ
றும் ராக்ஷச ஸ்திரீகள் என்
ஆரியர்கள் எப்பேர்ப்பட்டவர்க
சொல்லுகின்ருர்கள் — சால்
வந்திருக்கின்ருர்கள் என்பதை
ஒரு திராவிடப் பெண்ணின்
பின் நிழலுக்குள் ஆரியர்கள்
படி வந்து கலந்து கொள்ளுகி
ருர்கள் என்பதையும் வெளிய
கிற்று. இந்தப் பழமொழி, ஒன்
உலகத்தை ஏமாற்றச் செட்திரு
வேண்டும்; அல்லது இது அவ
ளின் பழக்க வழக்கமாயிரு
வேண்டும். ஆகவே ஐந்து
இரண்டுகூட அவர்கள் சொ
ளில் உண்மையில்லை என்ப
யும், ஏதாவது உண்மையிருந்த
அதுவும் நம்முடைய விஷயங்க
தான் என்பதையும் இந்த விபா
திஞல் வெளிப்படுத்துகின்றேன்

இப்பொழுது எப்படி அவர்
அக்கிரமங்களை மறைத்துக்கொ
டும், பெருமையாய் பிரசா
செய்துகொண்டும், நம்முடை
யோக்கியமான காரியங்க
குற்றம் சொல்லிக்கொண்
அதற்கு நம்மவர்களையே கூ
கமர்த்திக்கொண்டும் வே
செய்து வருகிருர்களோ இதுபே
தான் இந்தப் பார்ப்பனர்கள்
னும் ஆரியர்கள் முன் காலத்தி
செய்து வந்திருக்கின்ருர்கள் எ
தோடு, நம்முடைய பாமர ஜ
கள் இவர்களை அப்போதும்
போதும் நம்பி ஏமாந்து வருகி
கள் என்பதும் 'ஐந்துக்கு இர
பழுதில்லை' என்னும் வியாசத்
வெளியாக்கப்பட்டன.

—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)
ருந்தால் மட்டுமே, பார்ப்பன
ணவர்க்குத் தரமேவண்டும்.
னெனில் பார்ப்பனர் அவர்க
டைய உரிமையைவிட 12 மட
ு அதிகப்படியாக அநுபவிக்கி
றனர், நம் சமுதாயம் உரிமை
லேயே பாதியைப் பறிகொடுத்
த் தவிக்கிறது. இந்தத் தாழ்வு
க வேண்டுமானால் அந்த
ர்வு குறைய வேண்டும். இங்
் பள்ளம் நிறைய வேண்டு
னால் அந்த மேடு மறைய
வண்டும். இந்தக் குப்பை சிறு
சையாகவாவது மாறவேண்டு
னால் அந்தக் கோபுரமும்
சையளவுக்காவது குறைய
ண்டும். கீழே இருப்பவ
ன் முதுகைப் படிக்கட்டாகக்
ண்டு மேலே ஏறியவன்,
து, கீழே இருப்பவனை
லே ஏற்ற வேண்டும். அவ
ஏற்றவில்லை என்றால் அது
சடிமட்டுமல்ல கீழ்மைக்
மும்கூட. பார்ப்பனர், அல்
ாரை, ஏணியாகக் கொண்டு,
ாயக் கோபுரத்தின் உச்
க் கொப்புக்குச் சென்று
டனர், சென்றபிறகு இந்த
யை உதைத்துத் தள்ளு
றனர். ஏணி மரத்தால்
தல்ல. மனித உருவால்
து; மனிதனை ஏணியாக
்து உதவி இருக்கிறான்.
லத்தை விட்டுக்கொடுத்து,
முதலில் செல்லாமல்,
ஏணியாக இருந்து, பார்ப்
மாந்தனை மேல் ஏற்றி இருக்
் கீழே இருந்த தமிழன்.
ும் மனிதன்—மேலே
ப்பவனின் நயவஞ்சகத்
கண்ணுறுபவன் எவனு
ாலும் இந்த அக்கிரமத்
தடுத்து கீழே இருப்
மேலே தூக்கிவிடத்
செய்வான். இதைத்
நீங்கள் ஓரளவு (முழு
அல்ல!) செய்ய முயன்றி

ருக்கிறீர்கள் பார்ப்பனரல்
லாத மாணவர்கள் கல்லூரிக
ளில் சேர விரும்பினால் அவர்
களுக்குச் சலுகை காட்டப்பட
வேண்டுமென்று உத்தரவு பிறப்
பித்துள்ளீர்கள். ஆண்டு பல
வாக வாழையடி வாழையென
வளர்ந்துவரும் அக்கிரமத்தை
கொஞ்சம் குறைக்கத் துவங்கி
இருக்கிறீர்கள். பார்ப்பனரல்
லாத மாணவர்கள் அவர்களு
டைய முழுப் பங்கையும் பெறும்
வரை அதிகப்படியாகப் பங்கு
பெற்றுவரும் பார்ப்பன மாண
வர்களுக்கு இடமே கிடையாது
என்று நீங்கள் கூறி இருக்க
லாம்—கூறியிருந்தால் அதில்
தவறில்லை—அதுதான் நியாய
மும்—ஆனால் கூறவில்லை. நீங்
கள் கூறியதெல்லாம் பார்ப்பன
ரல்லாத மாணவர்கட்குக் கொஞ்
சம் சலுகை காட்டப்பட வேண்
டும் என்பதுதான். இதற்குத்
தான் ஆரியம் சீறுகிறது. சீற்
றம் கொண்ட அக் கருநாகம்
சட்டசபையிலே கேள்வி வடி
விலே உலவுகிறது. அந்த நாகத்
தைச் சரியானதோர் குறுந்
தடி கொண்டு தாக்கி இருக்கி
றீர்கள். அத்தகைய குறுந்தடி
ஒன்று தங்களிடம் இருப்பதே
நாட்டுக்குத் தெரியாமல் இருந்
தது. அதை அன்று தெரி
வித்து விட்டீர்கள். ஓமந்தூரா
ரைக் கவிழ்க்க இந்நாட்டுக்
கோட்சேக்கள் செய்த சதி
தங்களைப் போன்றாரின் நெஞ்
சத்தில்கூட இன எழுச்சி எனும்
வித்தூன்றி இருக்கிறது. அந்த
ஆபத்தில், தாங்கள், ஆரிய ஒழி
ப்பு என்ற குறுந்தடி ஒன்றை
பெரியார் இராமசாமியிட மிரு
ந்து இரவல் வாங்கிக் கொள்ள
வேண்டியது அவசியம் என்று
எண்ணி அப்படியே செய்திருப்
பது காண நான் மிகமிக மகிழ்
கிறேன். அந்தத் தடி எங்கள்
தலைவருடையதாயிற்றே என்

பதற்காக அல்ல நான் மகிழ்
வது; அந்தத் தடியைக் கையா
ளும் திறமும் துணிவும் தங்கள்
காத்திற்கு ஏற்பட்டிருக்கிறதே
என்பதை எண்ணி! தங்கள் உள்
ளத்தில் திராவிட இன எழுச்சி
அரும்புவதை நினைத்து!

இந்த இரண்டாண்டுகளில்
பல இடங்களில் எம்மனோர்
மீது சுடுசொல் வீசினீர்கள், கலை
அறியாக் கயவர்களென எம்மை
ஏசினீர்கள், சில இடங்களில்
எங்கள் மீது சீறிப் பாய்ந்தீர்கள்
சிறு நாகமென. சில சமயம்
தமிழ்ப் புலவர்களைப் பார்த்து,
பிடி சாபம் என்று புன்மொழி
கூறினீர்கள், பள்ளிகளில் நாண்
திகப் பிரசாரமா என்று ஆர்த்
தெழுந்து கூவினீர்கள், ஆனால்
ஏப்ரல் 22ல் சட்டசபையில்
நீங்கள் கூறிய வாசகம் அவை
அத்தனையையும் எம் உள்ளம்
எனும் ஏட்டிலிருந்து பறித்தெடு
த்துவிட்டது. அந்தக் குற்றங்கள்
அத்தனைக்கும் கழுவாய்போல
அமைந்தது இந்த வாசகம்.

கடிதம் நீண்டுவிட்டதுபோல்
தோன்றுகிறது. இப்போ
தைக்கு இந்த அளவோடு நிறுத்
திக்கொள்கிறேன். சமயம்
நேரிட்டால் மீண்டும் கடிதம்
மூலமாகவே சந்திப்போம்.

இங்ஙனம்
அன்பும் பணிவுமுள்ள
தூ மாறு.

---

## தோழர்கட்கு!

சென்ற வாரம் முதல் போர்வாள் எல்லா ஹிக்கின் பாதம் ரயில்வே ஸ்டால்களுக்கும் அனுப்பப் படுகிறது. தோழர்கள் வாங்கி ஆதரிக்கவும்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஐந்து பெண்களேயும் நான் 1. தாரை, 2. அகலியை, 3. துரௌபதை, 4. சீதை, 5. மண்டோதரி என்கிற வரிசையில் எடுத்துக்கொள்ளுகிறேன்.

முதலாவது தாரை. தாரை என்பவள் தேவகுருவாகிய பிரகஸ்பதியினுடைய பெண்சாதி. இந்தம்மாவைப்பற்றிய விஷயம் அறிவதற்கு கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு காதம் காதமாய் ஊர்ப்பயணம் போகவேண்டியதில்லே. இன்றைக்கும் தெருத் தெருவாய் தாரையும் சந்திரனும் படுத்து உருளுவதும் நிர்வாணமாய் நின்றுகொண்டு சந்திரனுக்கு எண்ணெய் தேய்ப்பதுமான சத்காலட்சேபத்தை தினம் தினம் பார்த்து வருகிறோம். தாரையம்மாள் புருஷனே சங்கதி தெரிந்து இரண்டுபேருக்கும் சாபமிட்டதும், இவர்கள் இரண்டுபேருக்குமாகப் பிறந்த குழந்தை புதன் என்பவன் இருப்பதும் மேற்படி பார்ப்பனர்கள் சாஸ்திரங்களிலேயே இருக்கிறது.

ஆகவே குருவின் யோக்கியதை, குருபத்தினியின் யோக்கியதை, சிஷ்யனின் யோக்கியதை, ஆச்சிரமத்தின் யோக்கியதை, ஆரிய நாகரிகத்தின் யோக்கியதை ஆகிய இவ்வளவுக்கும் தாரையம்மாள் உதாரணமாக விளங்குகிருள். இதையெல்லாம் விட கற்பின் லக்ஷணத்திற்கும் இது ஓர் அரிய இலக்கியமாய் விளங்குகின்றது.

இரண்டாவது அகலியை அம்மாள் விஷயம். அகலியை அம்மாள் என்பவள் கௌதம முனிவர் என்கின்ற ஒரு ரிஷியின் பெண்டாட்டி. தெய்வ ராஜனை இந்திரன் இந்த அம்மாள்மேல் ஆசைப்பட்டு மாறு வேஷம் பூண்டு வீட்டிற்குள் நுழைந்ததாகவும், பிறகு ஒருவருக்கொருவர் இன்னார் என்று தெரிந்துகொண்டு இரண்டுபேரும் சுகித்ததாகவும், ரிஷி இந்த விஷயம் தெரிந்து இருவரையும் தண்டித்ததாகவும், அத்தண்டனேயால் இந்திரனுக்கு சரீரமெல்லாம் பெண்குறியாகவும் அகலிகை கல்லாகவும் ஆய்விட்டதாகவும் பார்ப்பன சாஸ்திரங்கள் என்பவைகளே சொல்லுகின்றன. அதுவும் தெருவில் போகின்ற சாஸ்திரங்கள் சொல்லவில்லே. ஐந்தாம் வேதம் என்று சொல்லப்படுவதாகிய பாரதம், இராமாயணம் முதலியவைகளில் தான் இந்த உண்மைகள் சொல்லப்பட்டிருக்கிறன. இதனுல் தேவர்களின் அரசனின் யோக்கியதையும், ரிஷி பத்தினிகளின் யோக்கியதையும் விளங்குகின்றது.

மூன்ருவது, துரௌபதையம்மன் சங்கதி. இந்தம்மாள் முதலில் ஒரு புருஷனே மாத்திரம் கட்டிக்கொண்டு பிறகு மாமியார் இஷ்டப்படி மற்றும் நால்வருக்கும் பெண்டாட்டியாக இருந்து வருகின்ருள். ஐந்துபேரிருந்தும் ஆசை தீராமல் இன்னொரு புருஷனேயும் மனதில் நினைத்து நினைத்துவருந்திபிருக்கின்ருள் என்பதை தானே ஒப்புக்கொண்டதல்லாமல் உலகத்தில் பெண்கள்பதிவிரதைகளாகஇருக்க வேண்டுமானுல் ஆண்மக்களே இருக்கக் கூடாது என்று தீர்ப்புங் கூறிவிட்டாள். இதனுல் அக்காலக் கற்புக்கு லக்ஷணம் புருஷனும், மாமியாரும் யாரிடம் போகும்படி சொன்னுலும் போய்த்தான் ஆகவேண்டுமென்பதும், அதுவும் கற்பில் சேர்ந்ததுதான் என்பதும் பிறகு தன்னிஷ்டப்படி யாரை ஆசைப்பட்டாலும் அதுவும் கற்புடன் சேர்ந்ததுதான் என்பதும் அக்கால வழக்கத்தில் இருந்ததாய் விளங்குகின்றது. ஆகவே ஐந்து கன்னிகைகளில் மூன்றுபேர் சங்கதி இப்படியிருக்கின்றதே என்று கேட்கப்படும் கேள்விகளுக்குத் தான் பார்ப்பனர்கள் ஐந்துக்கு இரண்டு பழுதில்லே என்றுசொல்ல அதிலிருந்து இந்தப் பழமொழி ஏற்பட்டது.

இந்த இரண்டில் ஒன்றும் குற்றமில்லேயா என்று பார்த்தால் அதிலும் ஒன்றைக் கழிக்க வேண்டியதாகத்தான் இருக்கின்றது. அடியோடு கழிக்கா விட்டாலும் சந்தேகத்திலாவது வைத்துத்தீரவேண்டியதாகத் தானிருக்கிறது.

நாலாவதான சீதையம்மாள் சங்கதியைப் பார்த்தால் முன் சொன்ன கதைகளின் படிக்கு அவ்வளவு இல்லாவிட்டாலும் உத்தம ஸ்திரீ என்றே முழுதும் பரிசுத்தமானவளென்றே கற்புக்கரசியென்றே சொல்வதற்கில்லே. குண விசேஷத்தைப் பற்றியோ வென்ருல், மாயமானேத் துரத்திக்கொண்டு ராமர் போன காலத்தில் வெகு நேரம்வரை திரும்பிவராதது கண்டு புருஷனேப் போய்ப்

பார்த்து வரும்படி சீதை லக்ஷ்மண
னுக்குச் சொல்ல லக்ஷ்மணன்
'போகவேண்டிய அவசியமில்லே
ராமர் எப்படியும் திரும்பிவருவார்
என்று சொன்னதற்கு 'அண்ணன்
செத்தால் என்னேக் கைப்பற்
லாம் என்று பார்க்கின்ருயா
என்று சொன்னதிலிருந்தே லக்ஷ்
மணனிடம் பழகிய சீதைக்கு
போதிய அறிவும், உயர் குணமும்
விஷயத்தை அறியும் சக்தியு
இல்லேயென்கிற தத்துவமும் ந
ருய் விளங்குகின்றது. தவிர சீதை
யிடம் வெகு காலம் நன்ருய்ப் ப
கிய அவள் புருஷனுகிய ராமனு
பல தடவை சீதையின் கற்பில் ச
தேகப் பட்டிருக்கிருன். அதாவ
ராவணனேக் கொன்றபின் முத
முதல் சீதையிடம் ஒரு தடவை ச
தேகப் பட்டபோது சீதையிட
என்ன சொல்லுகின்ருன் என்
"ஏ சீதை! நான் உன்மே
ஆசைப்பட்டு உன்னே மீட்டு
கொண்டு போவதற்காக ராவண
டம் யுத்தம் செய்யவில்லே. பி
என்ன வென்று கேட்பாயானு
ஒருவன் பெண்சாதியை மற்றெ
வன் அடித்துக் கொண்டுபோ
விட்டால் அவனேச் சும்மா விட்
விடுவது வீரனுக்கு அழகாகும
என்கின்ற ரோசத்தின்மேல்தா
சண்டை போட்டு அவனே
கொன்றேன். மற்றபடி ஒ
துஷ்டன் வீட்டில் அதுவும் அவ
டைய அதிகாரத்திற்கும் பலத்தி
கும் கட்டுப்பட்டு 10 மாதம் வசித்
தன் பெண்சாதியை சுயமரியா
யுள்ள எவனுவது மறுபடியு
சேர்த்துக் கொள்வானு?' என்
சொன்னதோடல்லாமல் "சக
விதத்திலும் அவனுடைய சுவ
தீனத்திலிருந்த நீ அவனுக்கு வச
படாமலிருந்திருக்க முடியுமா
ஆதலால் நீ எங்கே வேண்டுமா
லும் உன்னிஷ்டப்படி போகலாம்
உன்னே நான் ஏற்றுக்கொள்
மாட்டேன். கோபத்தால் சொல்
வில்லே. நெடுநேரம் ஆலோசித்
செய்த முடிவு இது" என்
சொன்னுன்.

(இந்த இடத்தில் ராமன் உல
அபவாதத்திற்குக் கட்டுப் ப
இப்படி சொல்லவில்லே. தானே
சந்தேகப்பட்டு ஒருவித முடி
செய்து கொண்டு சொல்லுகிரு
என்றுதான் அர்த்தம்) அதே
'பத்துமாதம் எதிரிவீட்டில் வசித்

என்பதால் இதுவரை உயிர் வைத்திருந்தாயே என்கின்ற கருத் ம் தொக்கி யிருக்கின்றது.

இதற்கு சீதை சொல்லும் பதில் ன்ன வென்ருல் :—

"ஏ ராமா நீ சொல்வது உண் ம? அதற்கு நான் என்ன செய் க்கூடும்? நானே ஒரு பெண். ண்டியாயும் அனாதையாயும் இருந் வள். ராவணனே ராக்ஷசன். ளவற்ற பலசாலி. என்னால் டியவரை தடுத்துப்பார்த்தேன். னக்கு எள்ளளவாவது அவனு ன் போகவேண்டும் என்கின்ற சை யிருந்ததா? விதியை நோக ண்டியதே தவிர என்னைக் குற் க் சொல்லக்கூடாது. என் ரம்தான் பிறருக்கு வயப்பட் தே ஒழிய என் ஹிருதயம் அப் பாழுதும் இப்பொழுதும் எப்பொ தும் உன்னிடத்திலே இருக்கின் . சுதந்திரமற்ற நான் என்ன ய்ய முடியும்? அனுமானை னுப்பி நான் இருக்குமிடத்தை ம் ஸ்திதியையும் அறிந்துவரச் ன்னதன் மூலம், நான் லங்கை ராவணனுடைய வீட்டில் ருப்பதாகத் தெரிந்தவுடனே ன்னை ஏன் தள்ளிவிடவில்லை" றுதான் சொன்னாள். (இது ல்மீகி ராமாயணம் யுத்த காண் 117, 118-வது சருக்கங்களில் ணப்படுவது) இந்த இடத்தில் ன் சீதையைப் பார்த்து 'நீ பழிந்து விட்டாய் என்று நான் மானித்து விட்டேன்' என்று ளிப்படையாய் சொல்லிக் டியதற்கு சீதை ஏன் அப்படி தும் நடக்க வில்லை என்று ரியமாய் சொல்லியிருக்கக் து என்கின்ற கேள்விக்கு ல் இல்லை. அதோடு 'என் சரீ அவன் வயப்பட்டு விட்டது. ல் அப்போதும் மனம் உன்னி ான் இருந்தது. விதியை கவேண்டுமே பொழிய என்னை க்கூடாது. ராவணன் வீட் இருந்ததையும் என் ஸ்திதியை அனுமான் பார்த்துவிட்டு சொல்லி இருப்பானே. போதே ஏன் என்னைத் தள்ளி தாகச் சொல்லி அனுப்ப என்பதாக வெல்லாம் லுவதினால் விஷயம் சந்தே காவது இடமுண்டாகின் இல்லையா என்பதை யோசித் பாருங்கள். ஒரு சமயம் இராவணன் மீது அதிகமான பழி யைச் சுமத்த வால்மீகர் வேண்டு மென்றே இப்படி எழுதி இருக்கக் கூடும் என்று சொல்வதானால் அது வேறு விஷயம். என்னவென்ருல் அது ராவணன் சங்கதியைப்பற்றிப் பேசும்போது கவனிக்கவேண்டிய விஷயம்.

இது தவிர, மற்ருெரு தடவை வண்ணான் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு கொஞ்சங்கூட முன் பின் யோசிக்காமல் திடீரென்று லக்ஷ்மணனை விட்டு சீதையை நடுக்காட்டில் கொண்டுபோய் விட்டு வந்ததும், அங்கு சீதை தன் கற்பைப் பற்றி யார் என்ன சொல்லிவிடப் போகிருர்களோ எனப்பயந்து "லக்ஷ்மணா இதோ பார், நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கிறேன்" என்று சொன்னதும், காட்டில் இரட்டைப்பிள்ளை பெற்றதாக ஒரு ராமாயணத்திலும், தர்ப்பையைக்கிள்ளிப்போட்டு வால்மீகி ஒருபிள்ளையை உண்டாக்கினர் என்று மற்ருெரு ராமாயணத்திலும் சொல்லப்பட்டாலும் இந்த பிள்ளைகளை ராமன் ஒப்புக்கொள்ளாமல் வால்மீகி முதலிய எவ்வளவோ பெரிய தவ சிரேஷ்டர்கள் என்போர்கள் பிரமாணம் செய்தும் ஒப்புக்கொள்ளாமல் மறுபடியும் நெருப்பில் இறங்கும்படி சொன்னதும் அதற்கு சீதை கட்டுப்படாமல் உலக அபவாதத்தையோ அல்லது ராமனுடைய சந்தேகத்தையோ நிவர்த்தி செய்ய வேண்டாமா என்கின்ற கவலையில்லாமல் பூமியைப் பிளக்கச் செய்து பூமியில் இறங்கி மறைந்துவிட்டாள்' என்றும் எழுதப் பட்டிருக்கிறது. இன்னமும் என்னென்னவோ இருந்தாலும் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு இதுவே போதும்.

எனவே சீதையின் விஷயமானது சந்தேகப்படுவதற்கில்லாமல் போகவில்லை என்பதோடு சீதையின் லக்ஷ்மித் தன்மையும், ராமனின் விஷ்ணுத் தன்மையும் எப்படிப்பட்டதென்று விளக்கவும், ஆரியர் பழக்க வழக்கங்களையும் அக்காலத்திய ஆரிய ஆண்பெண்கள் வாழ்க்கை நிலைமையையும் வெளியாக்கவும் உதவுகின்றது.

கடைசியாக மீதி இருப்பது ஐந்தாவதான மண்டோதரி அம்மாள். இந்தம்மாள் விஷயத்தில் ஒரு தகராறையும் காணேம். கம்ப ராமாயணத்தில், புருஷன் பிரிந்த உடன் செத்துவிட்டான் என்கின்ற சங்கதி தெரிந்து அழுது உயிர் விட்டு விட்டதாகக் காணப்படுகின்றது. தவிரவும் செத்துப்போன ராவணனைப் பார்த்து அழும்போது சீதை குலத்திலாவது உருவத்திலாவது குணத்திலாவது சாமர்த்தியத்திலாவது என்னை விடச் சிறந்தவளா என்று மாத்திரம் கேட்டிருக்கின்ருள். இது சீதையின் குணத்தை 10மாதம் நேரிலிருந்து பார்த்தவள் கேட்டிருப்பதால் இதில் மண்டோதரி பேரில் குற்றம் சொல்வதற்கில்லை. ஆனால் சீதையின் குணம் தான் வெளியாக்கப் பட்டதாக வைத்துக் கொள்ளவேண்டும்.

ஆதலால் மேற்குறிப்பிட்ட ஐந்து கன்னிகைகள் என்பவர்களில் மண்டோதரியின்பால் மாத்திரம் குற்றம் சொல்ல இடமில்லை. கற்புள்ள பெண் என்றே சொல்லலாம். ஆனால், இதை திராவிட நாகரிகத்துக்கும் திராவிடச் சிறப்புக்கும் இலக்கியமாக வைத்துக்கொள்ளலாம்.

பொதுவாக பஞ்ச கன்னிகைகளின் யோக்கியதையைப் பார்க்கின்றபோதும், கற்பு இலக்கணங்களைப் பார்க்கின்றபோதும், குரு, அரசன், ரிஷி, கடவுள் என்பவர்களைப் பார்க்கின்றபோதும் நன்ருய் கவனித்தால் இதன் ஆபாசங்கள் விளங்குவதோடு ஐந்துக்கு இரண்டாவது சுத்தமாய்த் தேர்கின்றதா என்பது வெளியாகும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## திருவத்திபுரம் செய்தி

திருவத்திபுரம் தன்மதிப்பு திராவிட இளைஞர் மன்ற ஆண்டுவிழா 25-4-48 ஞாயிறு காலையிலும் திராவிடர் பொதுக்கூட்டம் மாலையிலும் சிறப்புற நடைபெற்றன. இரு நிகழ்ச்சிகளுக்கும் விடுதலை ஆசிரியர் குருசாமி அவர்கள் தலைமை வகித்தார். பெரியார் படத்தை C.D.T. அரசு அவர்களும் நாகம்மையார் படத்தை தோழியர் குஞ்சிதம் அவர்களும் திறந்து வைத்தனர். தோழர்கள் ஏ. பி, ஜனார்த்தனமும், மா. இளஞ்செழியனும் தற்கால அரசியல் நிலைபற்றிப் பேசினர்.




## தொடர்கதை:

ஒன்பதாவது பகுதி

### கன்னியின் கலக்கம்.

நாற்காலியில் உட்கார்ந்திருந்த வையாபுரி, அன்று காலே வந்த தினசரி யொன்றைக் கையில் வைத்துக்கொண்டு, ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டவரைப்போல காணப்பட்டார். கண்களை நன்கு திறந்து, பத்திரிகையில் ஒரே இடத்தை அடிக்கடி பார்த்தார். அவர் விரல்கள் நெற்றியைத் தடவிக் கொடுத்தன. அவர் வாய் ஏதேதோ முணுமுணுத்தது.

"குமுதினி!" என்று தன்மகளை அழைத்தார். அப்பா ஏதோ சொல்ல அழைக்கிருர் என்றெண்ணிய குமுதினி வேகமாக உள்ளேயிருந்து வந்தாள்.

"குமுதினி, இன்று பத்திரிகையைப் பார்த்தாயா?" என்று ஆச்சரியம் கலந்த குரலில் வையாபுரி கேட்டார்.

"இல்லை அப்பா! ஏதாவது முக்கியமான செய்தியிருக்கிறதா"? என்று சாதாரணமாக குமுதினி கேட்டாள்.

வையாபுரி பேசாமல் பத்திரிகையை அவளிடம் கொடுத்துவிட்டு எழுந்து வெளியே சென்றுவிட்டார்.

தினந்தினம் பத்திரிகையைத் தவருது பார்க்கும் பழக்கம் குமுதினியிடம் கிடையாது. ஏதாவது ஒருநாள் பொழுது போகவில்லையென்ருலோ அல்லது படிப்பதற்குச் சுவையுள்ள புத்தகங்கள் கிடைக்கவில்லை யென்ருலோதான் அன்று அவள் பத்திரிகையைப் பார்ப்பது வழக்கம். அப்பொழுதும் அரசியல் சம்பந்தமான செய்திகளைப் படிக்க மாட்டாள். தீப்பற்றியதால் ஏழுபேர் இறந்தனர்; பட்டினியின் கொடுமை தாங்காது, தான் பெற்ற குழந்தைகள் மூவரைக் கிணற்றில் தள்ளிவிட்டுத் தானும் விழுந்து இறந்தாள் ஒரு பெண்; அமெரிக்காவில் ஒரு மாதுக்கு ஒரே சமயத்தில் ஆறு குழந்தைகள் பிறந்தன; விதவை யொருத்தி தான் கள்ளத்தனமாகப் பெற்ற குழந்தையை, இரவில் கிணற்றில் போட்டுவிட்ட குற்றத்திற்காக ஐந்து மாத சிறைத் தண்டனை பெற்ருள்; — இவை போன்ற சிறுசிறு ஆனல் அவளுக்குப் பிடித்தமான — செய்திகளை மட்டும்தான் தினத்தாள்களில் அவள் படிப்பது வழக்கம்.

நிதானமாகப் படிக்கலாமென்று, பத்திரிகையை எடுத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்று கட்டிலின்மேல் படுத்தாள்.

கட்டிலில் படுத்ததும் அவளும் குமாரும் ஆனந்தத்தால் மெய் மறந்த இன்ப நேரங்கள் கன்னியின் கவனத்திற்கு வந்தன. தன் கண்களில் தோன்றிய நீரைத் துடைத்துக் கொண்டு, பத்திரிகையைப் பிரித்தாள் படிக்க.

"பழத்தூர் ஜமீன்தார் கொலை" என்று கொட்டை கொட்டையான

(8-ம் பக்கம் பார்க்க)

அறிஞர் அண்ணுவின்

—————

உலகப் பெரியார் 1
ரேடியோவில் அண்ணு 0
ரோமாபுரி ராணிகள் 2
கம்பரசம் 1
குமரிக்கோட்டம் 1
விந்தலைப் போர் 1
கற்பனைச் சித்திரம் 1
ஆரிய மாயை 1
சிறுகதைகள் 1
வர்ணுஸ்ரமம் 0
தாழ்ந்த தமிழகமே 0
மே தினம் 0

ரேடியோ பேச்சு

★

தீண்டாமை 0
சமதர்மம் 0
வாலிபர் தேவை 0
மேடைப் பேச்சு 0
காந்தி 0

★

திராவிடப் பண்

தெப்பக்குளம் ::

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimo… DtFree Printers 147, Coral Merchant St., Madras. JointEditor, M. Ilancheliyan B.A.